குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**DVC.NO.3/2025**

வழக்கு சாட்சி ம.சா.1

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் மனுதாரரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Kokila | தொழில் | |
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**நாள் 10.10.2025**

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள புகார், பிரமாண பத்திரிக்கை ஆகியவற்றை படித்து பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார், பிரமாண பத்திரிக்கையில் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதாக எங்கும் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன படித்துள்ளேன் என்றால் B.E., படித்துள்ளேன். எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் Excel கல்லூரியில் படித்தேன். நானும், 1ம் எதிர் மனுதாரரும் எத்தனை வருடமாக காதலித்து வந்தோம் என்றால் சிறு வயதலிருந்தே காதலித்து வந்தோம். அவரை பற்றி எல்லா புரிதலும் இருக்கும் என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர் மனுதாரருக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரு அக்கா, ஒரு அண்ணன் ஆகும். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரு அக்கா மட்டும். 1ம் எதிர் மனுதாரருக்கு உடன் பிறந்தவர்களுக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். 1ம் எதிர் மனுதாரரின் அண்ணன் காதல் திருமணம் தான் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். நல்ல முறையில் தான் வாழ்ந்து வருகிறார்கள். எனது அக்காவிற்கும் திருமணம் ஆகி அவரது கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது நாங்கள் வசித்து வரும் வீட்டில் எனது அப்பா, அம்மா மற்றும் நான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் தற்போது சொந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு, சென்னையில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். அதில் மாதம் ரூ.17,000/– சம்பளம் வாங்கி வந்தேன் என்றால் சரிதான். பின்னர், எனது கணவரை பிரிந்த பிறகு பெங்களூரில் உள்ள ஒரு தனியார்

நிறுவனத்தில் 2024 செப்டம்பர் மாதம் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். எத்தனை மாதங்கள் வேலை செய்து வந்தேன் என்றால் செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை வேலை செய்து வந்தேன். அங்கு எனக்கு எவ்வளவு சம்பளம் என்றால் ரூ.30000/– ஆகும். மேற்படி சம்பளம் எனது வங்கி கணக்கில் தான் செலுத்தப்படும் என்றால் சரிதான். தற்போதும் சென்னை, பெங்களூரு போன்ற தனியார் நிறுவனங்களுக்கு வேலைக்கு சென்றால் சம்பளம் உயர்வுடன் கூடிய வேலை கிடைக்கும் என்றால் தற்போது வாய்ப்பு மிக குறைவு. செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை வேலை செய்து வந்ததாக சொல்லும் நிலையில், அச்சமயத்தில் எனது கணவரை பிரிந்து தான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். மேற்படி கால கட்டத்தில் எனது கணவருடன் சேர்ந்து வாழ முயற்சிக்கவில்லை என்றால் செய்தோம். திருமணத்திற்கு பின்னிட்டு, எத்தனை மாதங்கள் கழித்து சென்னையில் குடியேறினோம் என்றால் திருமணமாகி இரண்டு மாதத்தில் சென்னை சென்றுவிட்டோம். திருமணம் நடைபெறுவதற்கு முன்பே எனது கணவருக்கு சென்னையில் வேலை கிடைத்துவிட்டது என்றால் சரிதான். சென்னையில் சுமாராக எவ்வளவு வாடகை இருக்கும் என்றால் சுமாராக ரூ.7,500/– இருக்கும். எங்களது திருமணத்தை எனது பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா என்றால் சரிதான். எதிர் மனுதாரர் வசதி குறைவாக இருப்பதால், எனது பெற்றோர் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக பெற்றோர் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை என்றால் காதல் திருமணம் என்பதால் எதிர்ப்பு தெரிவித்தார்கள். 1ம் எதிர் மனுதாரர் வசதி குறைவு என்பதால், அவரை திருமணம் செய்தால் எனது வாழ்வு மேம்படாது என்பதால் திருமணத்திற்கு எனது பெற்றோர் சம்மதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ காவல் நிலையத்தில் புகாரோ, நீதிமன்றத்தில் மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றால் ஏப்ரல் 2025ம் வருடம் நாமக்கல் SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரை இவ்வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர் மனுதாரர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று அளித்திருக்கிறார் என்றால் தெரியும். நான் 1ம் எதிர் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று நானும், 1ம் எதிர் மனுதாரரும் காதலித்து வருகிறோம், எங்களுக்கு திருமணம் செய்து வையுங்கள் என்று கேட்டேன் என்றால் இல்லை. எங்களது திருமணத்திற்கு எனது பெற்றோர் வரவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர் மனுதாரரும், 3ம் எதிர் மனுதாரர், எனது பெரியப்பா, எனது பெரியம்மா சேர்ந்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான்.

எங்களது திருமணத்திற்கு எனது பெற்றோர் சம்மதிக்காத காரணத்தினால், பிளேடால் எனது கழுத்தை அறுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் எதிர் மனுதாரரும் சண்டை வந்த காரணத்தால் தான் 1ம் எதிர் மனுதாரர் எனது கழுத்தை அறுத்துவிட்டார். மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் குறித்து எனது பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது பெற்றோர் காதல் திருமணத்திற்கு சம்மதிக்காததால் நானே எனது கழுத்தை பிளேடால் அறுத்துக்கொண்டேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக வேண்டி 1ம் எதிர் மனுதாரர் தான் எனது கழுத்தை பிளேடால் அறுத்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.த.சா.ஆ 5 ஆவணத்தில், எனது கழுத்தில் Stiches போட்டவாறு உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எனது பெற்றோர் திருமணத்திற்கு சம்மதிக்காத காரணத்தால் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு ஆவணத்திலும் எனது பெற்றோருடன் இருக்கும் புகைப்படம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு எத்தனை மாதங்கள் கழித்து எனது பெற்றோருடன் பேசினேன் என்றால் 3 மாதங்கள் கழித்து பேசினேன். திருமணதிற்கு தேவையான அனைத்து விஷயங்களையும், தேவைகளையும் 2ம் எதிர் மனுதாரர் மற்றும் 3ம் எதிர் மனுதாரர் செய்தார்கள் என்றால் சரியல்ல. சென்னையில் குடி பெயர்ந்த போது, வீட்டு உபயோக பொருட்கள் யார் வாங்கி கொடுத்தார்கள் என்றால் யாரும் வாங்கி கொடுக்கவில்லை. எந்த பொருட்களும் வாங்கி கொடுக்கவும் இல்லை. சாட்சி பின்னிட்டு பொருட்களை வாங்கியதாக சொல்கிறார். திருமணத்திற்கு முன்பு எங்கும் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் படித்த பெண்மணி என்றால் சரிதான். தமிழ், ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் சரிதான். ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றால், மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை அணுகி பின்னிட்டு தான் மருத்துவர் கொடுக்கும் Description வைத்து மாத்திரை வாங்கி சாப்பிடுவோம் என்றால் சரிதான். 2018ம் வருடம் நான் கருவுற்றிருந்ததாக சொல்லும் சங்கதிகள் முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. நான் கருவுற்ற விஷயத்தை எனது பெற்றோரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் கொடுத்த விட்டமின் மாத்திரையை சாப்பிட்டு, அதனால் எனது கரு கலைந்து விட்டது என்று கூறி இருக்கும் நிலையில், மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேனா என்றால் இல்லை. மாத்திரையை சாப்பிட்ட பிறகு, உடலில் மாற்றம் ஏற்படுகிறது என்று சொல்லி 1ம் எதிர் மனுதாரரை மருத்துவமனைக்கு அழைத்தேனா என்றால் இல்லை. மாத்திரையை கொடுத்து எனது கருவை கலைத்ததாக சொல்லப்படும் நிலையில், இது

சம்பந்தமாக எந்த காவல் நிலையத்திலோ புகார் அளித்தேனா என்றால் இல்லை. சென்னைக்கு சென்று எத்தனை நாட்கள் பின்னிட்டு ஊருக்கு திரும்புவோம் என்றால் பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ நாட்களுக்கு மட்டுமே வருவோம். எதாவது தேவைகள் இருந்தால் மட்டுமே வருவோம். ஊருக்கும் வரும் சமயத்தில் யார் வந்து கூட்டி செல்வார்கள் என்றால் எனது வீட்டில் இருந்தும் வருவார்கள், அவர்கள் வீட்டில் இருந்தும் வருவார்கள். ஊருக்கு வந்த பின்னர் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விடுவேனா என்றால் 2ம் எதிர் மனுதாரர் வீட்டிற்கு சென்று விட்டு தான் செல்வேன். திருமணம் ஆகி இரண்டு மாதம் கால அளவு தான் 2ம் எதிர் மனுதாரர் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மனுதாரர் வீட்டில் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம், 2ம் மற்றும் 3ம் எதிர் மனுதாரர் என்னை வரதட்சனை வாங்கி வா என்று கொடுமைப்படுத்தியதாக சொல்லும் நிலையில், எந்த காவல் நிலையத்திலும் புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உள்ளூரில் ஏற்பட்ட தகராறில் 1ம், 2ம் மற்றும் 3ம் எதிர் மனுதாரர்கள் என்னை கீழே தள்ளி கரு கலைந்துவிட்டதாக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. அதே ஊரில் உள்ள பெற்றோர்களும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. மேற்படி SP அலுவலகத்தில் என்னால் கொடுக்கப்பட்ட புகாரில் என்ன விவரம் உள்ளது என்றால் என் கணவர் வேறு திருமணம் செய்ய முற்படுவதால், அதை தடுத்து நிறுத்த கோரி மனு அளித்திருந்தேன். மேற்படி SP அலுவலகத்தில் என்னால் கொடுக்கப்பட்ட புகார் 27.03.2025 தேதியிட்டது என்றால் சரிதான். ஆனால், அதற்கு முன்பாகவே எனது கணவர் திருசெங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று அளித்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் நான் முன்பாகவே நான் 100க்கு தொடர்பு கொண்டு, எனது கணவர் வேறு திருமணம் செய்ய முயற்சிக்கிறார் என்றால் புகார் அளித்தேன். எந்த மாதம், எந்த வருடம் எனது கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றார் என்றால் ஆகஸ்ட் மாதம் 2024ம் வருடம் சென்றார். அச்சமயம் நான் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த Assets and Liabilities ரூ. 70,000/- என்று குறிப்பிட்டிருக்கும் நிலையில், அதனை நிரூபிக்க எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**